# பெப்ரவரி – 09 - வெள்ளி

**புனித அப்போலோனியா**

**ஆண்டவரை வெறுப்போர் அவர்முன் கூனிக்குறுகுவர்: திபா. 81:15**

## முதல் வாசகம் : 1 அரசர் 11: 29 –32 12 : 19

ஒரு நாள் எரொபவாம் எருசலேமிலிருந்து வெளியே போனபோது சீலோமைச் சார்ந்த அகியா என்ற இறைவாக்கினர், அவனை வழியில் கண்டார். அவர் புதுச் சால்வை ஒன்று அணிந்திருந்தார். இருவரும் வயல் வெளியே தனித்திருந்தனர்.அப்பொழுது அகியா நாம் போர்த்தியிருந்த புதுச் சால்வையை எடுத்து அதைப் பன்னிரு துண்டுகளாய்க் கிழித்தார். பிறகு அவர் எரொபவாமை நோக்கிப் பின் வருமாறு கூறினார் "இவற்றில் பத்துத் துண்டுகளை உனக்கென எடுத்தக் கொள். ஏனெனில் இஸ்ரயேலரின் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு இவ்வாறு கூறுகிறார் "இதோ, நான் சாலமோன் கையினின்று அரசைப் பறித்து, பத்துக்குலங்களை உனக்கு அளிக்கப் போகிறேன்.ஆயினும் உன் ஊழியன் தாவீதை முன்னிட்டும், இஸ்ரயேலரின் நகர்கள் அனைத்திலிருந்தும் நான் தேர்ந்து கொண்ட எருசலேம் நகரை முன்னிட்டு ஒரு குலம் மட்டும் அவன் கையில் இருக்கும். தாவீதின் குடும்பத்துக்கு எதிராக அன்று கிளர்ந்தெழுந்த இஸ்ரயேலர் இன்றுவரை அவ்வாறே இருக்கின்றனர்.

**பதில்பாடல் :** கடவுளாகிய ஆண்டவர் நானே. நீங்கள் எனக்குச்செவிசாய்ப்பீர்கள்.

## நற்செய்தி : மாற்கு 7 : 31 –37

அக்காலத்தில் இயேசு தீர் பகுதியை விட்டு, சீதோன் வழியாகச் சென்று தெக்கப்பொலி பகுதி நடுவே வந்து, கலிலேயக் கடலை அடைந்தார். காது கேளாதவரும் திக்கிப்பேசுபவருமான ஒருவரைச் சிலர் அவரிடம் கொண்டு வந்து, அவர்மீது கைவைத்துக் குணமாக்குமாறு அவரை வேண்டிக் கொண்டனர். இயேசு அவரைக் கூட்டத்திலிருந்து தனியே அழைத்துச் சென்று, தம் விரல்களை அவர் காதுகளில் இட்டு, உமிழ்நீரால் அவர் நாவைத் தொட்டார். பிறகு வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு விட்டு, அவரை நோக்கி "எப்பத்தா" அதாவது "திறக்கப்படு" என்றார். உடனே அவருடைய காதுகள் திறக்கப்பட்டன் நாவும் கட்டவிழ்ந்தது. அவர் தெளிவாகப் பேசினார். இதை எவருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்கு அவர் கட்டளையிட்டார். அவரது கட்டளைக்கு நேர்மாறாக இன்னும் மிகுதியாய் அவர்கள் அதை அறிவித்து வந்தார்கள். அவர்கள் அளவு கடந்த வியப்பில் ஆழ்ந்தவர்களாய் , "இவர் எத்துணை நன்றாக யாவற்றையும் செய்து வருகிறார்! காதுகேளாதோர் கேட்கவும் பேச்சற்றோர் பேசவும் செய்கிறாரே!" என்று பேசிக்கொண்டார்கள்.

**தியானம்:** கடவுளின் வார்த்தை ஒருவரின் வாழ்வை மாற்றி உருவாக்கக் கூடியது. ஒருவர் இயேசுவின் போதனைகளின் படி வாழும் போது அவர் புது வாழ்வு பெறுகிறார். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட எல்லோரும் மாறினர். வாழ்வு பெற்றனர்.எனவே நாம் எமது அழைப்பின் படி வாழும் போது நாமும் நம்மைச் சார்ந்தவையும் இயேசு தங்கும் இடமாக மாறுகிறது. இன்றைய நற்செய்தியில் காது கேளாதவரும் திக்கப் பேசுபவருமானொருவரை சிலர் இயேசுவிடம் குணமாக்குமாறு வேண்டிக்கொண்டனர். ஆண்டவரின் இரக்கம் மகிழ்ச்சியைக் கொண்டு வருவதாக அமைகின்றது. அவரின் இரக்கம் ஆண்டவர் வல்ல செயல்கள் ஆற்றக்கூடியவர் என்று அவருடைய வார்த்தைகளை நம்பி எதிர் நோக்குடன் இருப்பவர்கள் அனுபவிக்கும் ஆசீர்வாதமாக உள்ளது. ஆண்டவரின் வார்த்தைகளை நம்பாதோர் பல்வேறு தீமைகளால் கட்டுண்டோராக உள்ளனர். உண்மையை அறிந்து பேச இயலாதோராய் இதயம் இருந்தும் அன்பு செலுத்த முடியாதவராய் கட்டுண்டவராய் உள்ளனர். அவரின் வார்த்தையை கேட்கும் போதும் விசுவாசிக்கும் போதும் எம்மைக் கட்டுப்படுத்தும் தீய சக்திகளை கண்டு கொள்கிறோம். எமது வாழ்வில் நாம் விடுபட முயற்சிக்கின்றோமா?